# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2141/85 - 2019 සැප්තැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2019.09.20

*2141/85 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***யாத்திரைக் கட்டளைச் சட்டம்***

*அம்மடுவ சின்னக் கதிர்காமம் எசல திருவிழா - 2019*

*2019, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி அன்று பிரித் புண்ணிய தானம் செய்யப்படும் சுபநேரத்தில் கொடியேற்றம் நடைபெறும்.*

- *ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி பிரித்.*
- *ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி வரை திருவிழா.*
- *ஒற்றோபர் மாதம் 09, 13, 14, 18 ஆந் திகதி வரை திருவிழா.*
- *ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி காலை பாரம்பரிய தியபோல பொகுனு மூகலனெ நீர்வெட்டுடன் திருவிழா இனிதே நிறைவுபெறும்.*

*2. தேவாலயத்தில் வடக்குப் பாகத்திலும் பின் பாகத்திலும் தெற்கு நோக்கியும் ரன்வல அம்மடுவ வீதியின் கிழக்குப் பக்கம் கபுபூசார் அவர்களின் இடமும் மேற்குப் பக்கமாக நிலமே அவர்களின் இடமும் வையாகக் கொள்ளப்படுகிறது.*

*3. நோயாளர்கள், தொற்று நோயாளர்கள் மற்றும் இனிப்புப் பண்ட வியாபாரிகள் மேலும் அன்னதானம் கொடுக்க விரும்பும் எவரும் இப்பகுதியில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.*

*4. மாவட்ட அதிகாரியின் அனுமதி இன்றி மாடுகளையோ அல்லது வேறு எவ்வித மிருகங்களையோ கொண்டு செல்லக்கூடாது.*


1A - G 31035 — 20 (2019/09)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

5. திருவிழா நடைபெறும் பூமிப்பகுதியில் வாகனம் செலுத்தவோ நடமாடவோ அனுமதிக்கப்பட மாட்டாது.

6. இப்பகுதியில் இருக்கும் வியாபார நிலையங்களுக்கிடையில் 04 அடி தூரத்தில் (1 1/2 குறையாமல்) குப்பைக் கூடைகள் வைக்கப்பட வேண்டும்.

7. தேநீர் கோப்பை, கோப்பி கோப்பை, பால் பெக்கட் போன்றவைகளை குப்பைக் கூடைகளில் போடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. மாவட்ட அதிகாரியின் 15, 16, 17 மற்றும் 18, 19 ஆம் உத்தரவாதப்படி இப்பூமியில் இருக்கும் வியாபார நிலையங்கள், பேக்கரி, சாப்பாட்டுக் கடைகள் என்பன தற்காலிகமாக மூடப்படும்.

9. இப்பகுதியில் தொற்றுநோயாளர்கள் இருப்பின் அவர்களை மற்றவர்கள் அறிந்துகொண்டால் உடனடியாக வைத்தியருக்கோ சுகாதார நிலையங்களுக்கோ அல்லது பொலிஸ் அதிகாரிக்கோ அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

10. வியாபார நிலையங்களின் சொந்தக்காரர்களுக்குப் பதிலாக உறவினர்கள் அல்லது வேறு யாராவது நோயாளர்களாக இருப்பின் அவர்கள் வியாபார நிலையங்களுக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

11. வியாபார நிலையங்கள், பேக்கரி மடங்கள் அல்லது அன்னதானம் வழங்கும் இடத்தில் நோய்க்குள்ளான எவரையும் அதிக நேரம் தங்கவிடாமல் வைத்திருக்கவோ சுகாதார நிலையங்களுக்கோ அல்லது பொலிஸ் அதிகாரிக்கோ அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

12. 7 ஆவது நிபந்தனையின்படி பிச்சை எடுக்கவோ இலவசமாக உணவு வழங்கவோ அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தைத் தவிர வேறு இடங்களில் பிச்சை எடுக்கவோ இலவசமாக உணவு வழங்கவோ இடமளிக்கப்பட மாட்டாது.

13. 7 ஆவது அல்லது 10 ஆவது நிபந்தனையின்படி ஒவ்வோர் இடங்களுக்கான பெயரையோ பெயர்ப்பலகையையோ மாற்றுவதற்கு யாருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

14. இவ்வுத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்ட அதிகாரி, வைத்திய அதிகாரி, சுகாதார உத்தியோகத்தர் ஆகியோருக்கு திருவிழா நடைபெறும் பூமிப் பிரதேசத்தில் குடிசை அமைப்பதற்கு அல்லது தூண் வைப்பதற்கு சட்டபூர்வமாக இடமளிக்கப்பட்டுள்ளது.

அனுராத ஜயகொடி,
பிரதேச செயலாளர்,
வெலிகெபொல.

10-202

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.